# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2017

தரம் - 10 | சைவசமயம் | நேரம் : 3 மணி

### பகுதி - I

**மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

1) விநாயகருக்குரிய விரதங்களில் ஒன்று
   1. விநாயக சஷ்டி 2. கந்தசஷ்டி 3. திருவாதிரை 4. புரட்டாதிச்சனி

2) இறைவன் தடத்த நிலையில் எத்தனை குணத்தை உடையவர்?
   1. முக்குணம் 2. எண்குணம் 3. பலகுணம் 4. அறுகுணம்

3) சமஸ்காரம் எனும் பதம் குறிப்பது?
   1. இலக்கியங்கள் 2. தத்துவங்கள் 3. சடங்குகள் 4. பண்டிகைகள்

4) "அன்பும் சிவமும் இரண்டென்பர்…." எனும் பாடலின் நூல்
   1. திருக்குறள் 2. திருமந்திரம் 3. பெரியபுராணம் 4. இதிகாசம்

5) நிலை பெறுமாறெண்ணுதியேல் …." எனும் பாடலை பாடியவர்
   1. சம்பந்தர் 2. சுந்தரர் 3. நாவலர் 4. திருநாவுக்கரசர்

6) வாய்மை பற்றி இருவரியில் கூறும் நூல்
   1. திருக்குறள் 2. திருமந்திரம் 3. பெரியபுராணம் 4. ஆத்திசூடி

7) பஞ்சாங்கம் தோற்றம் பெற்ற காலம்.
   1. பல்லவர் காலம் 2. சோழர் காலம் 3. குப்தர் காலம் 4. நாயக்கர் காலம்

8) சனீஸ்வரனுக்குரிய வாகனம்
   1. குயில் 2. கொக்கு 3. எலி 4. காகம்

9) இரட்சாபந்தனம் என்பது
   1. காப்புக்கட்டுதல் 2. மாலை மாற்றுதல்
   3. தேங்காய் உடைத்தல் 4. உண்ணுதல்

10) விநாயக புராணம் பாடியவர்
   1. வரதபண்டிதர் 2. வைத்தியநாத தேசிகர்
   3. நாவலர் 4. திருமூலர்

11) பொன்னூஞ்சல் நிகழ்த்தப்படுவது யாருடைய வீட்டில்
   1. மணமகள் வீட்டில் 2. பொற்கொல்லர் வீட்டில்
   3. மணமகன் வீட்டில் 4. மண்டபத்தில்

12) தீபாவளியை யட்ச ராத்திரி என அழைப்பது
   1. நவராத்திரி 2. அசுரன் இரவு 3. சிவராத்திரி 4. மங்கல இரவு

13) கிருகஸ்த நிலை என்பது
   1. மாணவநிலை 2. காடேகுநிலை 3. இல்லறநிலை 4. சந்நியாச நிலை

14) சாம வேதத்தில் முக்கியம் பெறுவது.

1. இசை 2. நாடகம் 3. கலை 4. நடனம்

15) இன்சொல் பேசுதல் என்பது

1. அறம் 2. பண்பு 3. விழுமியம் 4. செயல்

16) இறைவனின் ஆடல் கோலத்தை விளக்கும் பாடலடி

1. உற்றுமை சேர்வது 2. நாமார்க்கும் குடியெல்லோம்
3. பண்டு நால்வர்க்கு 4. குனித்த புருவமும்

17) சுந்தரர் இறையடி சேர்ந்தது.

1. சித்திரைச் சதயம் 2. ஆடிச்சுவாதி 3. ஆனிமகம் 4. ஆடிப்பூரம்

18) கட்டளை, துதி, மந்திரம் கொண்ட வேதம்

1. இருக்கு 2. யசுர் 3. அதர்வணம் 4. சாமம்

19) ஆளுடைய நம்பி புராணத்தை இயற்றியவர்

1. சுந்தரர் 2. சேக்கிழார் 3. நம்பி 4. அருணகிரிநாதர்

20) மகோற்சவ கிரியையில் சூர்னோற்சவம் உணர்த்தும் தத்துவம்

1. படைத்தல் 2. மறைத்தல் 3. அருளல் 4. அழித்தல்

21) சாம்பவ தீட்சை பெறத் தகுதி உடையவர்

1. நோயுற்றோர் 2. தீட்சை பெறாதவர் 3. தீயோர் 4. மேற்கூறிய யாவும்

22) உமாபதி சிவாச்சாரியார் முத்தியடைந்த தினம்

1. சித்திரைச்சதயம் 2. சித்திரை அத்தம்
3. மார்கழித்திருவாதிரை 4. பங்குனி உத்தரம்

23) சதாசிவம் இயற்பெயர் கொண்ட சந்தான குரவர்

1. அருணந்தி சிவாச்சாரியார் 2. உமாபதி சிவாச்சாரியார்
3. மறைஞான சம்பந்தர் 4. மெய்கண்ட தேவர்

24) “இறைவன் எனக்கு இட்ட பணியை நிறைவேற்றுவேன்….” என்பது யாருடைய வாசகம்

1. சுந்தரர் 2. திருநாவுக்கரசர் 3. சம்பந்தர் 4. திருமூலர்

25) யாழ் நூலினை அருளியவர்

1. விவேகானந்தர் 2. சுவாமி விபுலானந்தர் 3. ஞானப்பிரகாசர் 4. நாவலர்

26) விடிமாவளவும் விளக்கனையது

1. ஆணவம் 2. கன்மம் 3. மாயை 4. சதசத்து

27) சைவ சித்தாந்தத்தில் அப்பினிடை உப்பு என எடுத்துக் காட்டிய விளக்கிய பொருள்

1. பதி 2. பசு 3. முத்தி 4. பாசம்

28) மகரசங்கிராந்தி என்பது

1. தீபாவளி 2. வருடப்பிறப்பு 3. தைப்பொங்கல் 4. ஆடிப்பிறப்பு

29) பூதாக்கலத்தை வேறு எப்பெயர் கொண்டு அழைப்பர்

1. உண்ணுதல் 2. மருவி உண்ணுதல்
3. பாத்திரத்தில் போடுதல் 4. பெரிய உணவு

The National e-learning Portal for The General Education

30) அருச்சுனன் வழிபட்ட தலமாகக் கூறப்படுவது

1. மருதடி விநாயகர்  2. செல்வச்சந்நிதி

3. மாவிட்டபுரம்  4. திருக்கேதீச்சரம்

31) ஜீவ காருண்யம் எனப்படுவது

1. கொல்லாமை  2. தூய்மையாக இருத்தல்

3. பூசை செய்தல்  4. அன்றாட கருமங்களை ஆற்றல்

32) சேவல் கொடியை உடையவர்

1. முருகன்  2. சிவன்  3. பிள்ளையார்  4. வைரவர்

33) அருணந்தி சிவாச்சாரியார் இயற்றிய எட்டு நூல்களின் பெயர்

1. சித்தாந்த அட்டகம்  2. சிவஞானபோதம்

3. சிவஞான சித்தியார்  4. அபிராமி அந்தாதி

34) மறைஞான சம்பந்தர் இயற்றிய நூல்

1. சிவஞான போதம்  2. சதமணித்திரட்டு  3. நெஞ்சு விடு தூது  4. கொடிக்கவி

35) சுந்தர மூர்த்தி நாயனார் இவ்வுலகில் வாழ்ந்த காலம்

1. 18  2. 32  3. 16  4. 81

36) புலிக்கால் முனிவர் என அழைக்கப்படுபவர்

1. வசிட்டர்  2. வாமதேவர்  3. சுத்திரி  4. வியாக்கிரம பாதர்

37) இயற்கை வழிபாடு காணப்படும் தேசம்

1. இருக்கு  2. யசுர்  3. சாமம்  4. அதர்வணம்

38) பட்டர் பாடிய நூல்

1. அபிராமி அந்தாதி  2. திருப்புகழ்

3. திருவகுப்பு  4. கந்தபுராணம்

39) ஆலயத்தில் விசேடமாக நடைபெறும் கிரியை

1. நித்தியகிரியை  2. காமிய கிரியை

3. நைமித்திய கிரியை  4. கும்பாபிஷேகம்

40) நித்திய அன்னதானம் இடம்பெறும் ஆலயம்

1. நல்லூர் முருகன் ஆலயம்  2. கட்டுக்கலை செல்வ விநாயகர்

3. மாவிட்டபுரம் கந்தசுவாமி  4. நயினை நாகபூசணி

(40 புள்ளிகள்)

## பகுதி – II

**முதலாம் இரண்டாம் வினா உட்பட விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1) 1.

I. இறைவன் ஆற்றுகின்ற ஐந்த தொழில்களையும், அவற்றின் முத்திகளையும் தருக.

II. பாடசாலையில் இறைபிரார்த்தனையுடன் ஆற்றப்படும் கருமங்கள் மூன்று தருக.

III. சைவ விழுமியங்கள் 5 தருக.

IV. பஞ்சாங்கங்களின் வகையை தந்து அவற்றின் இடையேயான நேர வித்தியாசத்தை தருக.

V. சக்தி விரதங்கள் இரண்டினை தருக?

VI. செல்வச்சந்நிதி ஆலயத்தின் தலவிருட்சம், தீர்த்தம் என்பவற்றைத் தருக.

VII. புறச் சந்தான, அகச்சந்தான குரவர்களின் பெயர்களைத் தருக.

VIII. திலகவதியாரின் தாய், தந்தை பெயரைத் தந்து அவர் செய்த பணிகள் 2 தருக.

IX. சித்தர்களின் இயல்புகள் 3 தருக?

X. சதசத்து என்றால் என்ன? அவ்வாறு அழைக்கக் காரணம் யாது?

(20 புள்ளிகள்)

2)

I. பின்வரும் தேவாரங்களின் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதுக.

II. அவற்றின் பொழிப்புரையைத் தருக.

அ. "அங்கமும் வேதமும்........"

இ. "கற்றவர் விழங்கும்........."

ஆ. "அந்நதணர் நாளும்........."

ஈ. "தந்ததுன் றென்னை........."

(10 புள்ளிகள்)

3) "மனித வாழ்வில் விழுமியங்கள் இன்றியமையாதது"

I. விழுமியம் என்றால் என்ன?

II. விழுமியங்களைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள் 2 தருக.

III. வாய்மை பற்றி சுருக்கமாகத் தருக (10 புள்ளிகள்)

4) "என்கடன் பணி செய்து கிடைப்பதே..."

I. திருநாவுக்கரசரின் தாய், தந்தை பெயர்களையும், அவர் நின்ற நெறி, மார்க்கம் என்பவற்றையும் தருக.

II. இவரின் மறுபெயர்கள் 4 தந்து இரண்டிற்கு விளக்கம் தருக.

III. சுந்தரர் செய்த அற்புதங்கள் 5 தருக.

(10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

5) "பழம் பெருமை கூறும் நூல்கள் என்றும் பொக்கிஷமே"

I. இதிகாசம் என்பதன் பொருள் யாது? நூல்கள் 2 தருக?

II. புராணம் என்பதன் பொருள் யாது? உதாரணம் 2 தருக.

III. மகாபாரதத்தில் சைவத்தின் தொன்மை எவ்வாறு விளக்கப்படுகின்றது?

(10 புள்ளிகள்)

6) "ஒரு பொருள் காட்டும் திருவருங் காட்டும்……….."

I. திருவருட்பயன் என்பதன் பொருள் யாது? அதன் ஆசிரியர் யார்?

II. வேதத்தின் மறுபெயர்கள் எவை? நான்கையும் தருக.

III. அதர்வண வேதத்தினைச் சுருக்கமாகத் தருக? (10 புள்ளிகள்)

7) பின்வரும் விடயங்கள் இரண்டிற்கு சிறுகுறிப்பு தருக?

I.விரதம்

II. மகோற்சவம்

III. திருமூலர்

IV. கொக்கட்டிச் சோலை தான் தோன்றீச்சரர்

(10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## பகுதி I விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 1 | 2) 2 | 3) 3 | 4) 2 | 5) 4 |
| 6) 1 | 7) 3 | 8) 4 | 9) 1 | 10) 2 |
| 11) 3 | 12) 4 | 13) 3 | 14) 1 | 15) 3 |
| 16) 4 | 17) 2 | 18) 3 | 19) 2 | 20) 2 |
| 21) 4 | 22) 2 | 23) 1 | 24) 4 | 25) 2 |
| 26) 3 | 27) 3 | 28) 3 | 29) 2 | 30) 4 |
| 31) 1 | 32) 1 | 33) 3 | 34) 2 | 35) 1 |
| 36) 4 | 37) 2 | 38) 1 | 39) 3 | 40) 4 |

## பகுதி II விடைகள்

1)

I. படைத்தல் - பிரமன்
காத்தல் - விஸ்ணு
அழித்தல் - உருத்திரன்
மறைதல் - சதாசிவன்
அருளல் - மகேஸ்வரன்

II. காலைப்பிராத்தனை
வகுப்பறைக்கு ஆசிரியர் வரும்போது வணக்கம் கூறுதல்

III. உண்மை பேசுதல், விட்டுக் கொடுத்தல், உதவி செய்தல், பொறுமை, பஞ்சமாபாதங்களை நிறுத்தல்.

IV. வாக்கிய பஞ்சாங்கம், திருக்கணித பஞ்சாங்கம்

V. வரலட்சுமி, நவராத்திரி

VI. பூவரசு, தொண்டமணாறு

VII. மெய்கண்ட தேவர் அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர்
உமாபதி சிவாச்சாரியார்
சத்தியஞான தர்சிகன், சனற்குமாரர், திருநந்தி தேவர், பரஞ்சோதி முனிவர்

VIII. புகழனார், மாதினியார்
இறை தொண்டு சில எழுதியிருப்பின்

IX. சிவன்பால் மனதை ஒருமுகப் படுத்தியவர்
அடியார்கள் மீது அன்பு கொண்டவர்கள்
அற்புதங்கள் நிகழ்த்துபவர்கள்

X. பசு
இறைவன் - சத்து + பாசம் அசத்து

2) தேவாரங்கள் எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்.

3)

I. மனிதனை மனிதனாக வாழ வைக்கும் உயர் பண்புகள் விழுமியப் பண்புகள் எனப்படும்.

II. உதவி செய்யும் மனப்பாங்கு, ஜீவ காருண்யம் வளரும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு உருவாகும்

III. வாய்மை பற்றி எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்

4)

I. புகழனார், மாதினியார். சரியை, தாசமார்க்கம்

II. அப்பர், உழவாரப்படையாளி, ஆளுடைய அரசு, தருமசேனர்

III. விளக்கம் தங்கியிருப்பின் முழுப்புள்ளி வழங்கவும்.

1. செங்கட்டிகளை பொன்கட்டிகளாக்கியமை
2. பொதி சோறு பெற்றமை
3. இடக்கண், வலக்கண் பெற்றமை
4. இறைவனிடம் பொன் பெற்றமை

5)

I. இப்படி முன்பு நடந்தது
இராமாயணம், மகாபாரதம்

II. புராதனமானவை, பழமை வாய்ந்தவை
திருவிளையாடல் புராணம், விரத மகிமை கூறும் புராணம், தல புராணம்

III. அருச்சுனன் திருக்கேதீச்சரத்தை வழிபட்டார்.

6)

I. இறைவனின் திருவருளையும் அதன் பயன் பற்றியும் கூறுவது

II. நால்வேதம், நான்மறை, சதுர்மறை, சதுர் வேதம்
இருக்க, யசுர், சாமம், அதர்வனம்

III. மந்திரங்கள், மாயங்கள் கொண்டவை.
நோயை தீர்க்கவல்லது.
மனச் சுமையைக் குறைப்பது.

7) எழுதியவற்றிற்கு உரிய புள்ளி வழங்கவும்.

The National e-Learning Portal for The General Education